2020 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாவரம் பகுதியில் நீண்ட நாட்களாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடுத்துக்கொண்டிருக்கக்கூடிய கேள்வி இது. அங்கே இடம் ஒதுக்கப்படுவதில் பல்வேறு சிக்கல்கள் மீண்டும் மீண்டும் ஏற்படுகின்றன. அந்தப் பகுதியில் இருக்கும் மக்களிடம் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்ற காரணத்தால், இது தள்ளிச் சென்று கொண்டேயிருக்கிறது. கூடியவிரைவில் அதில் ஒரு முடிவு எடுக்கப்பட்டு புதிய கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

65—

சிறப்புத் திட்டம்

***47231—திரு. S. செம்மலை:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு போக்குவரத்தைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கையை அதிகரிக்க சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரசு போக்குவரத்தைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு போக்குவரத்துக் கழகங்களில் பல்வேறுவிதமான புதிய திட்டங்கள் தீட்டி பயணிகளைக் கவரும் விதமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[*2020 பிப்ரவரி 20*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *செம்மலை அவர்கள்.*

திரு. S. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* *உலக நாடுகள் பலவற்றில், குறிப்பாக,* Hong Kong, Kenya, Russia, Ukraine, Philippines *போன்ற நாடுகளில் மக்கள் அதிக அளவில் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதற்குக் காரணம்,* Public transportation is safe and cheap. *அதாவது, பாதுகாப்பான பயணம், அதே சமயத்தில் சிக்கனமான பயணம். அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு லண்டன் மாநகரை எடுத்துக்கொண்டால்கூட, இப்போதைக்கு 60 சதவிகிதம் மக்கள் பொதுப் போக்குவரத்தைத்தான் பயன்படுத்துகிறார்கள். ஆனால், அந்த மாநகரத்தினுடைய நிருவாகம், 25 ஆண்டுகளில் பொதுப் போக்குவரத்துப் பயன்பாட்டை 80 சதவிகிதம் உயர்த்த வேண்டுமென்ற இலக்கை நிர்ணயித்திருக்கிறது. அந்த அடிப்படையில், போக்குவரத்துத் துறை ஒரு சேவைத் துறை என்பதை உணர்ந்த காரணத்தால்தான், அந்தத் துறைக்கு எந்த சிரமமும் இருக்கக் கூடாது, குறிப்பாக, டீசல் விலை உயர்வால் அந்தத் துறை நலிவடைந்துவிடக் கூடாது என்ற அடிப்படையில் அந்தச் சுமையையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, போக்குவரத்துத் துறைக்கு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கம் செய்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, ஒரு தொலைநோக்குப் பார்வையோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அதாவது டீசலுடைய பயன்பாட்டைக் குறைப்பதற்கும், சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், காற்றில் மாசு கலக்கக் கூடாது என்ற அடிப்படையில், இப்போது மின்சாரப் பேருந்துகளை அதிகமாக இங்கே நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்ற அந்தத் திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள். எனவே, நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புவது, நம்முடைய தமிழ்நாட்டிலே பொதுப் போக்குவரத்து, மக்களால் எத்தனை சதவிகிதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது? அதை அதிகப்படுத்துவதற்கு துறை ஏதேனும் இலக்கு நிர்ணயிக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.*

2020 பிப்ரவரி 20]

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நான்கு ஆண்டுகளில் மாண்புமிகு அம்மாவின் அரசு பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு பின்வரும் திட்டங்களையெல்லாம் செயல்படுத்தி வருகிறது:

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களில் தற்போது சாதாரண படுக்கை வசதி கொண்ட பேருந்துகள், படுக்கை மற்றும் இருக்கை வசதி கொண்ட பேருந்துகள், படுக்கை வசதி கொண்ட குளிர்சாதனப் பேருந்துகள், கழிவறை வசதி கொண்ட classic பேருந்துகள், பகல் நேரத்தில் குறைந்த தூரம் செல்லக்கூடிய புறநகர குளிர்சாதனப் பேருந்துகள் மற்றும் பயண நேரத்தைக் குறைக்கும் வகையில் நடத்துனரில்லா, இடைநில்லா பேருந்துகள் ஆகியவை இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வகைப் பேருந்துகள் பொதுமக்களிடத்தில் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகங்களில் பயணிகளின் அடர்வை அதிகரிக்கும்பொருட்டு வார நாட்களில், அதாவது, திங்கட்கிழமை முதல் வியாழக்கிழமை வரை இயல்பான பேருந்துக் கட்டணத்திலிருந்து 10 சதவீதம் குறைத்து, அதிநவீன சொகுசுப் பேருந்துகள் நீங்கலாக, குறைந்த கட்டணம் (flexi fare) வசூலிக்கப்படுகிறது. மேலும், இத்துடன் அதிநவீன சொகுசுப் பேருந்துகளில் அம்மா குடிநீர் 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஏற்கெனவே நடைமுறையில் உள்ள இணையதளம்மூலம் முன்பதிவு செய்யும் நடைமுறை tnstc.in தவிர, கடந்த 8–12–2018 முதல் RedBus, BusIndia, Paytm ஆகிய இணையதளம் மூலமாக முன்பதிவு செய்யும் வசதியும் செய்யப்பட்டுள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் சுமார் 7,000 புதிய பேருந்துகளை வாங்குவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் நிதியை வழங்கியுள்ளார்கள்.

மேலும், மத்திய அரசு நடைமுறைப்படுத்தியுள்ள FAME II திட்டத்தின் மூலமாக தமிழகத்திலுள்ள பெரு நகரங்களில் 525 மின்சாரப் பேருந்துகளை இயக்குவதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சென்னை மாநகரத்தில் பொதுப்

போக்குவரத்தை ஊக்குவிக்கும்பொருட்டு, மாநகரப் போக்குவரத்துக் கழகம், மெட்ரோ இரயில் நிறுவனத்துடன் இணைந்து, Common Mobility Card வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், BRTS–Bus Rapid Transit System–ஐ நடைமுறைப்படுத்த விரிவான திட்ட அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. விரிவான பரிசீலனைக்குப் பின்பு இத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பொதுமக்களின் பொருளாதார நிலையும், வாங்கும் திறனும் உயர்ந்த காரணத்தினால், பெரும்பாலான மக்கள் இரு சக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்களை அதிக அளவில் பயன்படுத்துவதால், பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. இருப்பினும், மாண்புமிகு அம்மாவின் அரசு பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டு, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.

திரு. S. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகனங்களின் விலை உயர்வு, எரிபொருட்களின் விலை உயர்வு, அதே சமயத்தில் இன்றைக்கு இருக்கின்ற போக்குவரத்து நெரிசல் இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, மக்கள் பொதுவாகவே பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்த முன்வந்திருக்கிறார்கள் என்பதுதான் நிதர்சனமான உண்மை. மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்கள் சமீபத்தில் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளிக்கின்றபோது, சீனாவில் 1,000 பேருக்கு 6 பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன; ஆனால், இந்தியாவில், தமிழ்நாட்டில் அல்ல, இந்தியாவில் 10,000 பேருக்கு 4 பேருந்துகள்தான் இயங்குகின்றன என்ற புள்ளிவிவரத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். எனவே, நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாக நம்முடைய போக்குவரத்துத் துறை, மக்களின் பயன்பாட்டிற்கு அதிக அளவில் பேருந்துகளை இயக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

2020 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–55

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தமிழகத்தில் 22,000 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதிலும் குறிப்பாக, 12,000 பேருந்துகள் கிராமப் பகுதிகளில் இயக்கப்படுகின்றன. இருந்தபோதிலும், இப்போது இயக்கக்கூடிய பேருந்துகளுக்கே பயணிகளின் அடர்வு மிகவும் குறைவாக இருக்கின்றது. இது சராசரியாக 60 சதவீதத்திற்கும் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், இன்னும் அதிகமான பேருந்துகளை இயக்கும்போது போக்குவரத்துக் கழகங்களுக்கு நிதிச் சுமை மிக அதிகமாக இருக்கும். இப்பொழுதே, ஒரு நாளுக்கு ரூ.7 கோடி அளவிற்கு நிதிச் சுமை ஏற்படுகிறது. அதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள், இதுவரை போக்குவரத்துக் கழகங்களின் வரலாற்றில் இல்லாத வகையில், ரூ.14,000 கோடி நிதியை போக்குவரத்துக் கழகங்களுக்கு அள்ளிக் கொடுத்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேவையிருக்கின்ற பகுதிகளில் அந்தப் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 4 மற்றும் 5)@

பட்டியல்–4

1—

அடுக்குமாடிக் குடியிருப்புகள்

வினா எண் 54787—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

@ இப்பட்டியல்களிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.